ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)
19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# திருமூலரும் வள்ளுவரும் காட்டும் கல்வி

**முனைவர் ஈ. சரவணக்குமார்**
உதவிப்பேராசிரியர், மொழிகள் துறை – தமிழ்ப்பிரிவு
கற்பகம் உயர்கல்விக்கழகம், கோயம்புத்தூர் – 641021
ORCID https://orcid.org/0009-0007-4999-6186

Abstract

The definition given by the term Valluvar education refers to community based activities. This is what Thirumoolar means education and wisdom. This article examines and explains the similarities and differences between the above two. Both of the above are understood to differ in two different activities only one thing namely education. In this article, you can see how many things have been recorded.

**திறவுச் சொற்கள்:** கல்வி - ஞானம் - அறிவு - வேறுபாடுகள் - ஒற்றுமைகள்

## முன்னுரை

வள்ளுவர் கல்வி எனும் சொல்லால் சுட்டப்படும் விளக்கமானது சமூகம் சார்ந்த செயல்பாடுகளைப் பற்றி குறிக்கின்றது. இதனையே திருமூலர் கல்வியையும் ஞானத்தையும் குறிக்கின்றார். மேற்கண்ட இருவரும் காட்டும் ஒற்றுமை வேற்றுமைகளை ஆய்ந்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது. மேற்காணும் இருவரும் கல்வி என்ற ஒன்றை மட்டுமே இரு வேறு செயல்பாடுகளில் பதிவு செய்துள்ள பாங்கும் வேறுபடுகின்ற பாங்கும் இக்கட்டுரையில் உணர்த்தப்பட்டுள்ளது.

## கருதுகோள்

“திருவள்ளுவரும் திருமூலரும் கல்வி சார்ந்த கருத்துக்களை விளக்கியிருக்க வேண்டும்” எனும் கருதுகோளை முன்வைத்து இவ்வாய்வுக் கட்டுரை பயணிக்கின்றது.

## கற்பதற்குச் சாதகமானவை

ஔவையார் கல்வியைப் பற்றிக் குறிப்பிடுவதை,

**“எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்”**

என்னும் வரி உணர்த்துகின்றது.

என்னும் எழுத்தும் கண்ணாக அமைவதை அறிய முடிகின்றது. இதனையே வள்ளுவர் என்னும் எழுத்தும் கல்வி கற்பதற்குச் சாதகமாக அமைவதை,

"எண்ணென்ப ஏனை
எழுத்தென்ப
இவ்விரண்டும்

கண்ணென்ப வாழும்
உயிர்க்கு" (திருக்குறள் 392)

எனும் குறட்பா மூலம் உணர முடிகின்றது. மனித வாழ்விற்குக் கண் ஒளி எவ்வளவு முக்கியமோ அதுபோல என்ன மேலத்தும் மனித வாழ்க்கைக்கு அடிப்படையானது என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

இதனையே திருமந்திரம்

"ஆய்ந்து கொள்வார்க்கு அரண் அங்கே
வெளிப்படும்

தோய்ந்த நெருப்பது தூய்மனி சிந்திக்கும்

ஏய்ந்த இளமதி எட்டவல் லார் கட்டு

வாய்ந்த மனமல்கு நூலேனி
யாமே" (திருமந்திரம் — 294)

என்னும் வரிகள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. நுட்பமாக ஆய்வு செய்பவருக்குத்தான் மனதிற்குள் இறைவனை உணர்ந்து கொள்ள முடியும். இப்படி ஒளியும் சிவனருளும் தெரிவதற்குப் பக்குவப்பட்ட மனதைக் கொண்டவர்களாலே முடியும்.

(வள்ளுவர் — என், எழுத்து

திருமூலர் — ஒளி சிவனருள்)

கல்வி கற்றவரின் மேன்மை

கல்வி கற்றவர்களை வள்ளுவர்
கண்ணுடையார் என்று குறிப்பிடுவதை ,

கண்ணுடையார் என்பவர் கற்றோர்
முகத்திரண்டு

புன்னுடையார் கல்லா தவர்
(திருக்குறள்393)

எனும் குறள் உணர்த்துகின்றது.

இதனை,

"கற்றறிவாளர் கருதிய காலத்துக்

கற்றிவாளர் கருத்திலோர் கண்டுண்டு

கற்றறிவாளர் கருதி உரை செய்யும்

கற்றறி காட்டே வயல்
உளவாக்குமே" (திருமந்திரம்-291 )

எனும் திருமந்திரப் பாடல் விளக்குகின்றது. சிறப்பான கல்வி ஞானம் கிடைக்கப் பெற்றவர்கள், சிறிது எண்ணிப் பார்த்தால் அவர்களது நினைவில் ஞானம் உள்ளதை உணர முடிகின்றது. இதனை அறிந்த கல்வியாளர்கள் தாங்கள் பெற்ற அனுபவமாகிய கல்வியை மற்றவர்களுக்குப் பகிர்வார்கள். இரு புலவரும் கற்றவரின் சிறப்புகளைப் பற்றி ஒரே வகையில் எடுத்துரைத்துள்ளனர்.

கற்றாறின் பண்பு நலன்கள்

கல்வி கற்றவர்கள் என்றுமே தன்னுடைய குணநலன்களில் கல்லாதவர்களைக் காட்டிலும் சிறந்து விளங்குவதை,

உவப்பத் தலைகூடி உள்ளப் பிரிதல்

அனைத்தே புலவர் தொழில் (திருக்குறள் 394)

எனும் குறட்பா உணர்த்துகின்றது. கல்வி கற்றவர்கள் அனைவரிடத்திலும் அன்புடனும் பண்புடனும் தன் வாழ்வை நடத்துவதாக வள்ளுவர் தன் கருத்தை ஆழமாகப் பதிவு செய்துள்ளார். இதனை திருமந்திரம்,

"துணையாவது வாய் வரும் தூயநற் சோதி

துணையாவது வாய் வரும் தூயநற்
சொல்லாம்

துணையாவது வாய் வரும் தூயநற் கந்தம்

துணையாவது வாய் வரும் தூயநற்
கல்வியே". (திருமந்திரம் 294)

எனும் வரிகள் மூலம் ஞான அருள் சிறப்பினை விளக்குகின்றது. மெய்ஞானம் பெற்றவர்கள் அனைவரிடத்திலும் பகைமை காட்டாமல் சிறந்து விளங்குவார்கள் என்பது புலனாகிறது.

(மனிதன் - கல்வி - அன்பு

மனிதன் - ஞானம் - அன்பு)

### ஆசானிடம் அருள் பெறுதல்

வசதி படைத்தவர்களிடம் சென்று உதவியினைக் கேட்பதைப் போல ஆசானிடம் மிகவும் பணிவாகப் பாடம் கேட்பவர்கள் வாழ்வில் என்றுமே சிறந்து விளங்குவார்கள் என்பதை,

"உடையார் முன் நில்லார்போ லேகற்றுங்

கடையரே கல்லாதவர்" (திருக்குறள் 395)

எனும் குறட்பா உணர்த்துகின்றது.

இதே செய்தியினைத் திருமந்திரம் குறிப்பிடுவதை,

தெளிவு குருவின் திருமேனி காண்டல்

தெளிவு குருவின் திருநாமம் செப்பல்

தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்

தெளிவு குரு உரு சிந்தித்தல் தானே
(திருமந்திரம் - 139)

பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன. ஆசிரியரைக் கண்டாலே தெளிவு பெற முடியும். அவர் பெயரைச் சொன்னால் தெளிவு பெறலாம். ஆசிரியரின் வார்த்தை யினைக் கேட்டுத் தெளிவு பெறலாம் என்று திருமூலர் குறிப்பிடுகின்றார்.

### கல்வி கற்றவர்களின் மேன்மைகள்

மனிதர்கள் தகுந்த பயனை அடைவது கல்வியினால் தான் கல்வி கற்றவர்களின் சிறப்பை உலகத்தார் கண்டு தானும் கல்வி கற்க எண்ணுவார்கள் என்பதை,

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு

காமுறுவர் கற்றறிந் தார்" (திருக்குறள் 399)

எனும் குறட்பா தெளிவாக உணர்த்துகின்றது. இதனை திருமந்திரமானது விளக்குவதை ,

பற்றது பற்றில் பரமனை பற்றுமின்

முற்றது எல்லா முதல்வன் அருள் பெறில்

கிற்ற விரகிற் கிள ரொளி வானவர்

கற்றவர் பேரின்பம் உற்று நின்றானே
(திருமந்திரம் 298)

எனும் வரிகள் மூலம் உணர்ந்து கொள்ள முடிகின்றது. சிவபெருமானின் அருள் சிறப்புகள் பெற்றுவிட்டால் உலகப் பற்றுகள் அனைத்தும் அழிந்துவிடும். பற்றினை விட்டாலே பரமனை அடைய முடியும். மனிதர்கள் இந்நெறியைப் பின்பற்ற வேண்டும். இதனால் தெரியப்படுவது என்ன வென்றால் கல்வி கற்றவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் வேறுபட்டு உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றப்படுகின்றனர்.

### முடிவுரை

- வள்ளுவர் உலகில் சார்ந்த அறிவைப் பெறுவதே கல்வி என்றும் திருமூலர் இறைவனைக் காண முற்பட்ட முயற்சியினை மேற்கொள்வது கல்வி என்றும் இருவரும் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளனர்.
- கல்வி கற்றவர்களின் உயர்வினை மேற்கண்ட இருவரும் சேர்ந்த நிலைப்பாட்டினைக் கொண்டுள்ளனர்.
- கல்வி கற்றவர்களின் பண்பு நலனைப் பற்றியும் எடுத்துரைக்கும் போது இருவரும் மொத்த கருத்துக்களைக் கொண்டுள்ளனர்.
- ஆசிரியர் பாடம் கற்பிக்கும் போது மாணவர் நிலையையும், அவர்கள் நடந்து கொள்ளும் விதம் குறித்தும் இருவருடைய பாங்கும் வெளிப்படுவது கட்டுரையின் வழி வெளிக்கொணரப் பட்டது.

### துணை நூற்பட்டியல்

1. அருணாச்சலம் ப - திருமந்திரக் கோட்பாடு, பாரிப் புத்தகப் பண்ணை, திருவல்லிக்கேணி, சென்னை 5
2. பொன்னம்பலப்பிள்ளை - திருக்குறள் மூலமும் உரையும், சென்னை 6